<u>**Deposition of Witness**</u>

<u>**Additional Subordinate Judge, Tenkasi.**</u>

Mcop 73/2023

.ம.சா.1 கோமதி

| | |
|---|---|
| Name | : கோமதி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 20.08.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்.

நான் இந்த வழக்கில் 1ம்மனுதாரர் ஆவேன். 2ம் மனுதாரர் என் மகள். 3ம் மனுாதாரர் எனது மகன். 4ம் மனுதாரர் எனத மாமியார்., நான் எனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் சேர்த்து நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 17.10.2022ம் தேதிய முதல்தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ1. விபத்தில் இறந்து போன நட்சாடலிங்கம் என்பவரின் பிரேத கூராய்வு அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ2. டி.என.79.எச்.1109 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ3. விபத்தில் இறந்து போன நட்சாடலிங்கம் என்பவரின் ஓட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ4. டி.என்.79.எச்.1109 என்ற வாகனத்தின் பதிவு எண் புத்தகம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ5. மேற்படி வாகனத்தின் பெர்மிட் கார்டு

ஜெராக்ஸ் நகல் ம.சா.சஆ 6. மேற்படி விபத்தில் இறந்து போனவரின் வாரிசுகளை காட்டக்கூடிய வாரிசு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 7.மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

2 ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

எனது கணவர் குருவையா என்பவரின் ஆட்டோவில் பணிபுரிந்தார். மனுதாரர்களாகிய நாங்கள் வாரிசுகள் என்பதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளோம். எனது கணவர் டிரைவராக பணிபுரிந்தார். எனது கணவர் இறந்ததற்கு வேலையாள் இழப்பீடு சட்டத்தின் கீழ் மனுதாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. எனது கணவர் இறக்கும்போது வயது 58 ஆகும். எனது கணவருக்காக வேலையாள் இழப்பீடு சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்திருந்தால் ரூ.9,35,250/- கிடைக்கும் என்றால் அது பற்றி தெரியவில்லை. எனது கணவர் மாதம் ரூ.30 ஆயிரம் வருமானம் பெற்று வரவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் மாதம் ரூ.30 ஆயிரம் சம்பளம் பெற்று வந்தார் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் கோரியுள்ள மற்ற தொகைகள் எதுவும் இந்த மனுவில் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. பல்வேறுதலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு தொகைகள் எதுவும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.